2021 பிப்ரவரி 25]

வினா வரிசை எண் 27, மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

27—

நடமாடும் கால்நடை மருந்தகம்

***73151—திரு. அம்மன் கே. அர்ச்சுணன்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் தெற்கு தொகுதியில் நடமாடும் கால்நடை மருந்தகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், கோயம்புத்தூர் தெற்கு தொகுதி, கோயம்புத்தூர் மாநகராட்சிப் பகுதியில் அமைந்திருக்கிறது. கோயம்புத்தூர் தெற்கு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதியில் 24 மணி நேரமும் இயங்கும் பன்முக கால்நடை மருத்துவமனை வளாகம் அமைந்திருக்கிறது. இந்த வளாகத்தைத் தலைமையிடமாகக் கொண்டு ஒரு நடமாடும் கால்நடை மருந்தகமும் செயல்பட்டு வருகிறது. கோயம்புத்தூர் தெற்கு தொகுதியைப் பொறுத்தவரையில், இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் 24 மணி நேரமும் இயங்கக்கூடிய மருத்துவமனைக்குத் தேவையான அனைத்து உபகரணங்களையும் வழங்கியிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். ஆகவே, கோயம்புத்தூர் தெற்கு தொகுதிக்குட்பட்ட பகுதியிலே அமைந்திருக்கக்கூடிய, 24 மணி நேரமும் செயல்படக்கூடிய மருத்துவமனை, மாண்புமிகு உறுப்பினருடைய சட்டமன்றத் தொகுதியிலே இருக்கக்கூடிய காரணத்தாலே, அங்கே கால்நடை மருந்தகம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2021 பிப்ரவரி 25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. அம்மன் கே. அர்ச்சுணன், இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. ராதாகிருஷ்ணன் அவர்கள்.

திரு. வி. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். எங்களது நீண்டநாள் கோரிக்கையான, நாகப்பட்டினம் மாவட்டத்தைப் பிரித்து மயிலாடுதுறை மாவட்டத்தை உருவாக்கித் தந்த எங்களது வரலாற்று நாயகரான, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்குகிறேன். மாண்புமிகு துணை முதல்வரான அண்ணன் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது மயிலாடுதுறை தொகுதிக்குட்பட்ட வானாதிராஜபுரம் கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க நீண்ட நாட்களாகக் கோரி வந்துள்ளேன். அந்த ஊரில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்கத் தேவையான எண்ணிக்கையில் ஆடு, மாடு, கோழிகள் நிறைய உள்ளன. எனவே, அந்த ஊரில் கால்நடைக் கிளை நிலையம் அமைப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10—45

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையில் கால்நடை பராமரிப்புத் துறையில் பல்வேறு அரிய சாதனைகளைப் படைத்து வருகிறது. அந்த வகையில் இன்றைக்குப் பார்த்தீர்களானால், தெற்கு ஆசியாவிலேயே மிகப் பிரம்மாண்டமான கால்நடை ஆராய்ச்சிப் பூங்காவினை உருவாக்க அறிவித்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டியிருக்கிறார். ஒரே வருடத்தில் 1,028 ஏக்கரில் ரூ.1,000 கோடியில் பிரம்மாண்டமான ஒரு கால்நடை மருத்துவக் கல்லூரி ஆராய்ச்சி மையத்தைத் திறந்து வைத்த சரித்திரத்தை உடையவர் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டக்

2021 பிப்ரவரி 25]

கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல; இன்றைக்கு மக்களுக்கு அம்மா ஆம்புலன்ஸ் வசதி எப்படி இருக்கின்றதோ, அதேபோல் கால்நடைகளுக்கும் ஆம்புலன்ஸ் வசதியை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று, 'அம்மா ஆம்புலன்ஸ்' என்கின்ற ஓர் அற்புதமான திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் கொடுத்திருக்கிறார். அதன்படி, 1962 என்ற எண்ணில் அழைத்தால் மாவட்டத்தில் எங்கிருந்தாலும் அங்கேயே வந்து கால்நடைகளுக்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது. இப்படி ஓர் அற்புதமான திட்டத்தைக் கொடுத்து, இன்றைக்கு அதன்மூலமாக மட்டும் பல கால்நடைகளின் உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கின்றன என்று சொன்னால், அதற்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களே காரணம் என்பதை இங்கே நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். நம்முடைய உறுப்பினர் அவர்கள் தனது தொகுதியில் உள்ள அந்தக் கிராமத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையம் வேண்டும் என்று சொல்லியிருக்கின்றார்கள். அந்தக் கால்நடைக் கிளை நிலையத்தை அமைப்பதைப் பொறுத்தவரையில், நம்முடைய கால்நடை பராமரிப்புத் துறையினுடைய இணை இயக்குநர் பெருமக்களை அங்கே அனுப்பி வைத்து, தேவைப்படுமாயின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, ஆய்வு செய்யப்படும் என்கிற நல்ல செய்தியை இந்த வேளையில் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. மருதமுத்து அவர்கள்.*

திரு. அ. மருதமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிமிர்ந்த நடை, நேர்கொண்ட பார்வை, விண்ணைமுட்டும் புகழுக்குச் சொந்தக்காரர், வீரத்தின் விளைநிலமாம் சேலம் மாவட்ட மண்ணுக்குச் சொந்தக்காரர், குடிமராமத்து நாயகர், தமிழ்நாட்டின் நிரந்தர முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களை வணங்கி, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு உறுதுணையாக இருந்துவரும் ஜல்லிக்கட்டு நாயகன் மாண்புமிகு துணை முதலமைச்சர் அண்ணன் அவர்களையும் வணங்கி, துணைக் கேள்வி கேட்க வாய்ப்பளித்த தங்களையும் வணங்குகிறேன்.

[*2021 பிப்ரவரி 25*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தெற்காசிய கண்டமே வியக்கும் வகையில் தலைவாசலில், வி.கூட்டுரோட்டில் ஓர் அற்புதமான கால்நடைப் பூங்காவை அமைக்க அடிக்கல் நாட்டி, ஓராண்டிலேயே அங்கு மருத்துவக் கல்லூரியைத் திறந்து வைத்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கு உறுதுணையாக இருந்த மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நான் நன்றிக்கடன்பட்டுள்ளேன். வி.கூட்டுரோட்டில் கால்நடைப் பூங்கா அமைத்ததோடு மட்டுமல்லாமல், தலைவாசலை அழகுபடுத்தும் வகையில், தலைவாசலை மையமாக வைத்து புதிய வருவாய் வட்டத்தை உருவாக்கிய தமிழ்நாட்டினுடைய நிரந்தர முதலமைச்சர் மாண்புமிகு அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் புதிய வருவாய் வட்டத்தை உருவாக்க உறுதுணையாக இருந்த மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அண்ணன் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதிக்குட்பட்ட வீரகனூர் பகுதியில், வீரகனூரிலிருந்து 12 கிலோ மீட்டர் தூரத்தில் திட்டச்சேரி, லத்துவாடி, கவர்ப்பணை ஆகிய மூன்று கிராமங்கள் உள்ளன. அந்த மூன்று கிராமங்களிலுள்ள கால்நடைகள் உடனடி சிகிச்சை பெற வேண்டுமென்றால், 12 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள வீரகனூர் கிராமத்திற்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. அதற்கும் அங்கே போதுமான போக்குவரத்து வசதி இல்லை. அந்தப் பகுதியானது 5,000 கால்நடைகளைக் கொண்டது. அங்கே ஒரு புதிய கால்நடை கிளை நிலையம் ஒன்றை அமைத்துக் கொடுத்தால், அந்தப் பகுதி மக்கள் சிரமமின்றி தங்களுடைய கால்நடைகளைப் பாதுகாத்துக்கொள்ள ஏதுவாக இருக்கும். எனவே, லத்துவாடி கிராமத்தில் ஒரு கால்நடைக் கிளை நிலையத்தை அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

2021 பிப்ரவரி 25]

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, அவருடைய சட்டமன்றத் தொகுதியில்தான் தெற்காசியாவிலேயே மிகப் பிரம்மாண்டமான கால்நடைப் பூங்கா அமைந்திருக்கின்றது என்று குறிப்பிட்டார். சரித்திரத்தில் இல்லாத வகையில், ஒரே வருடத்தில் மூன்று கால்நடை மருத்துவக் கல்லூரிகளைக் கொடுத்தவர் நமது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் என்பதைச் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதுமட்டுமல்ல; அந்தக் கால்நடை பூங்காவில் கால்நடை மருத்துவக் கல்லூரியையும் கொடுத்து, அங்கே 40 இடங்களும் ஒதுக்கப்பட்டன. தலைவாசலில் 40 இடங்கள்; உடுமலைப்பேட்டை சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பண்ணைக்கிணறு கால்நடை மருத்துவக் கல்லூரிக்கு 40 இடங்கள்; தேனி மாவட்டம், வீரபாண்டியில் 40 இடங்கள். ஆக மொத்தம் ஒரே வருடத்தில் 120 கால்நடை மருத்துவ மாணவர்கள் அந்தக் கல்லூரிகளில் சேர்வதற்கு ஒரு வாய்ப்பினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறார்கள். சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஓர் அரசு எப்படிச் செயல்பட வேண்டும் என்பதற்கு உதாரணம், இன்றைக்கு தெற்கு ஆசியாவிலேயே ஒரு மிகப் பிரம்மாண்டமான கால்நடைப் பூங்காவினை அமைத்திருப்பது: அந்தப் பூங்காவில் புதியதாக உருவாக்கப்பட்ட கட்டடத்திலேயே படிக்கின்ற ஒரு வாய்ப்பினை கால்நடை மருத்துவ மாணவர்கள் பெற்றிருக்கின்றார்கள் என்று சொன்னால், இதுதான் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு; இதுதான் மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்களுடைய சாதனை என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 10–50

கெங்கவல்லி தொகுதியினுடைய சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கால்நடைக் கிளை நிலையம் ஒன்று வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். அந்தப் பகுதியிலே இருக்கின்ற கால்நடைகளின் எண்ணிக்கையைப் பொறுத்து, தேவைப்படுமாயின், அங்கேயே ஒரு கால்நடைக் கிளை நிலையம் அமைப்பது குறித்து மாண்புமிகு முதலமைச்சரினுடைய

கவனத்திற்கு எடுத்துச்சென்று ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். தெற்கு ஆசியாவிலேயே மிகப் பிரம்மாண்டமாக உருவாக்கப்பட்டிருக்கிற கால்நடைப் பூங்காவைப் பொறுத்தவரை, அந்தப் பகுதி மட்டுமல்ல; அந்த மாவட்டம் மட்டுமல்ல; அனைத்துப் பகுதிகளிலே இருக்கின்ற மக்களுக்கும் மிகப் பெரிய வரப்பிரசாதமாக அது அமையப் போகிறது என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல; கால்நடை வளர்ப்பிலே இருக்கின்ற விவசாயப் பெருங்குடி மக்களினுடைய வாழ்வாதாரம் காப்பாற்றப்பட வேண்டுமென்பதற்காகத்தான், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளிநாடுகளுக்குச் சென்று, அங்கிருக்கின்ற கறவைப் பசுக்களினுடைய தரம் என்ன, வசதிகள் என்ன என்பதையெல்லாம் ஆய்வு செய்து, அந்த நுட்பங்களையெல்லாம் இங்கு கொண்டுவந்து, தற்போது விவசாயப் பெருங்குடி மக்கள் கறவைப் பசுக்களின் மூலமாகப் பெறுகின்ற பால் கறவை 4 லிட்டர், 5 லிட்டர் என்பதை குறைந்தது 15 லிட்டரிலிருந்து 20 லிட்டராக மாற்றக்கூடிய ஓர் அற்புதமான திட்டத்தை அங்கே உருவாக்கியிருக்கிறார்கள் என்று சொன்னால், இதுதான் அம்மாவினுடைய அரசின் செயல்பாடு. என்ன செய்தார்கள் என்று கேட்கின்றார்கள்; என்ன செய்திருக்கிறோம் என்பதை அந்தப் பகுதியின் வழியாகச் செல்கின்ற எதிர்க்கட்சியைச் சார்ந்தவர்களும், நாட்டு மக்களும் இன்றைக்குப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எதிர்க்கட்சியிலே இருக்கின்ற அனைவருமே அந்தக் கால்நடைப் பூங்காவைப் பார்த்துவிட்டுச் செல்ல வேண்டும். இதுதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களினுடைய சாதனை என்பதைக் குறிப்பிட்டு, அந்தப் பகுதியிலே, லத்துவாடி கிராமத்தில் கால்நடைக் கிளை நிலையம் கேட்டிருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை ஆய்வு செய்யப்படும் என்பதைத் தெரிவித்து விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 28, மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவ.வீ. மெய்யநாதன், மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் அவர்கள்.*